# ABEL

the disappeared...

Where are our dear ones

Fortnightly Bilingual abelfortnightly@gmail.com

Issue No. 19 2021 September-30 +14167669544 Designed by Samantha

**Editor: Arumugam Gopal Special Editor: Thozhar Thiagu**


## Beware! Gota, the killer-in-chief, wants to talk!



President of Sri Lanka, Gotabaya Rajapaksa's proclaimed readiness to talk to the Tamil Diasporahas been described by the TGTE as similar to a call from Hitler to talk to the Jewish Diaspora if hypothetically Hitler had managed to remain in power following the Holocaust, which meant his genocide of Jews.

What was the now-president-of-Sri-Lanka doing when the civil war 2008-09 was going

on? He was presiding over the military campaign to eliminate Tamils en masse in the name of fighting terrorism; commanding the armed forces to kill over 70 thousand Tamils as conservatively estimated by the UN Internal Audit report; overseeing the deliberate and intense shelling and bombing of areas designated by the Government as “No Fire Zones”, where the Tamil civilians had assembled for safety; strangulating the Tamil people by restricting food and medicine, resulting in large numbers of people dying from starvation and many of the injured dying of their wounds.

What Gotabaya and his gang of killers did amount towar crimes and crimes against humanity, as per international law. That these crimes constitute genocide can be easily proved beyond doubt by an independent international process of criminal investigation. International Truth and Justice Project (ITJP) in February 2017 handed over details to UN of Sri Lankan Military run "Rape Camps", where Tamil Women are being held as "Sex Slaves."

According to May 2012 report by the British Foreign and Commonwealth Office on Human Rights and Democracy; there are up to Ninety thousand (90,000) Tamil War Widows in the North- East of Sri Lanka.

Thousands of Tamils Disappeared, including Babies and Children. UN Working Group on Enforced Disappearances stated in 2020 that the Second Highest Number of Enforced Disappearance cases in the World is From Sri Lanka.

According to independent organizations, Tamil Areas have the Highest Concentration of

ABEL
the disappeared...
Fortnightly Bilingual
Editor: Gopal Armugam
Special Editor: Thozhar Thiagu
Designed by Samantha
Issue No. 19 2021 Sep-30
Contact No. +1 (416) 766-9544
E-mail: abelfortnightly@gmail.com

Security Forces in the World (Ratio: One soldier for every five Civilians).

Gotabaya in whatever capacity, past and present, has played a leading role in all the episodes cited above.

Without even a semblance of remorse for all the blatant abuses committed under his command he is now speaking of talks.

On the side-lines of the ongoing UN General Assembly sessions, the UN Secretary-General met Sri Lanka's President who is reported to have told the Secretary-General that, "the internal issues of Sri Lanka should be resolved through an internal mechanism of the country and said the Tamil Diaspora would be invited for discussions in this regard."

It is unthinkable for a victim community to have a discussion of any kind on any topic with a known genocidal state presided over by a known genocide-criminal.

Beware, there appears to be a concerted and multi-pronged drive from various quarters in and out of Sri Lanka to thrust some sortofreconciliation down the throats of Tamils without accountability and justice while going ahead with structural genocide. Gota’s offer of talks is obviously a part of this scheme.

Accountability is a prerequisite to any kind of political resolution. The Tamil Diaspora with whom Gotawants to talk has given him a fitting reply: The TGTE has thrown an open challenge at him: If you are genuinely interested in bringing peace to the island,

the first step is -- as UN High Commissioner for Human Rights Al Hussain recommended in 2015 -- that Sri Lanka should ratify the Rome Statue retroactively and give the International Criminal Court jurisdiction to investigate and prosecute the perpetrators of the international crimes, namely genocide, crimes against humanity, and war crimes committed during the final stages of the armed conflict between the Sri Lankan state and the Liberation Tigers of Tamil Eelam (LTTE) which ended in 2009.

WillGota release all Tamil prisoners of war and political prisoners held in Sri Lanka? Will he stop this "General Amnesty" rubbish? Who must forgive whom?

Will Gota put a freeze on colonization under the guise of archaeological research, development schemes, and forest preservation, as well as demilitarizethe North Eastern part of the island, the area of historical Tamil habitation? Will he revamp the Office of Missing Persons to make it a neutral and credible institution, allowing the UN High Commissionerfor Human Rights to nominate international experts as members and construct a mechanism for the victims to be involved throughout the process?

Will Gotabaya Rajapaksa set a firm timetable for a referendum similar to the referendum for the Tamils to decide their political destiny, a referendum with various options including an independent and sovereign state of Tamil Eelam?

No illusions please. Gotabaya will do none of these. Never. Beware of all attempts to sow such illusions wholly or partly. Be on guard.

# Emergency in Lanka

## Severe shortages of external financesleading to economic deprivations

--- NimalSanderatne ---




The country is moving rapidly closer towards mass deprivation of food, petrol, gas, medicines and bare necessities owing to a severe shortage of foreign currency and in-appropriate policies. A worsening of the current crisis is inevitable unless foreign assis-tance is secured immediately.

Rapid deterioration

The rapidity of the deteriorating external finances was such that last Sunday's discussion of it in this column was outdated by the news report in the same paper that consign-




ments of food and other essentials could not be released from the port owing to banks being unable to give foreign exchange to importers.

Critically low

The depletion in external finances reached such critically low levels that large amounts of essential imports were stuck at the port as banks did not release foreign currency to honour the letters of credit (LCs). Such is the severity of this financial crunch.

Ominous

Even more ominous was the report that “overseas corresponding banks are refusing letters of credit from local banks.” This in effect means that the country is unable to import. An early resolution of this problem is of utmost importance.

Puzzle

Even though foreign reserves have dipped to as low as about US$ 2.5 billion, it is difficult to understand why a relatively small amount of about US$ 25 or even 50 million could not have been released. The only plausible explanation is that banks did not want to sell foreign exchange at the low official rate when the market rate was much higher–nearly 50 rupees or 25 percent more.

Serious implication

The serious implication of this situation is that the country is unable to import essential food items and much needed raw materials for industry. This would create severe shortages of food, medicines, petroleum, gas and other essential imports.

Releasing exchange

The government has now decided to release foreign currency to meet this immediate crisis. The Central Bank of Sri Lanka (CBSL) released US$ 50 million to the two state banks to clear containers with essential goods that were stuck at the Colombo Port for weeks.

Prime Minister Mahinda Rajapaksa instructed the Controller General of Imports and Exports and the CustomsDirector General to immediately release 800 containers of essential food items which are stuck at the Colombo Port due to the failure by banks to release foreign exchange to importers. It is understood that the CBSL funds released yesterday could clear 400 such containers.

There are about another 400 such containers of essential commodities to clear. CBSL, it is understood, will release more funds, if needed, to clear more containers containing

essential imports.

## Food availability

The available food stocks are estimated to be adequate only till the end of October. May be we can stretch it a little further towards the end of the year. With a lower Maha harvest early next year owing to the lack of fertiliser, insecticides and fungicides, food availability could be a grave problem.

## The current problem

While the underlying reasons for the depletion of foreign reserves is well known, the cause for the current unavailability of foreign exchange is the wide gap between the official exchange rate imposed by the Central Bank and the market or black market rate. While the official exchange rate is around Rs. 205 for a US$, the market determined exchange rate is around Rs. 245 for a US dollar.

## Export earnings and remittances

This has led to several problems like non remittance of export proceeds, reduced foreign remittances and the unavailability of funds to clear cargo or open letters of credit for imports.We are not receiving export proceeds, remittances are declining and the black market in foreign currencies is thriving.

## Impact

The inability to import raw materials will decrease our export capacity and earnings. Moreover, tea and rubber production would fall appreciably owing to the ban on fertiliser, weedicides and fungicides, causing a severe drop in their exports and manufactured

rubber exports.

Remittances

Remittances, that rose till June has dipped since then owing to persons remitting dollars through informal sources that pay as much as forty to fifty rupees more for a US dollar. This decrease has been erroneously attributed to lesser workers in the Middle East. The actual reason is that those remitting money from all around the world are not remitting officially. They are remitting their dollars through informal sources that pay as much more for a US dollar.

The crisis

The consequences of the emerging crisis in external finances are horrendous. Are we heading to a Lebanon type catastrophe?

Overcoming the crisis

The resolution of the fundamental problem in the external finances has to be addressed in the manner discussed last week. At this critical juncture we must address the immediate crisis first.The immediate task is to obtain international assistance to augment the reserves adequately to remove the stranglehold on imports. This requires to be addressed in three ways.

The first step

The first step is to abandon the administered exchange rate and allow the market rate to prevail. Such an exchange rate policy will likely sky rocket the exchange rate to

much above the official exchange rate and perhaps, even the current black market rate. This can only be found out after the change. There are also possibilities of it being lower than the market rate, but higher than the official rate if there are foreign currency inflows.

The second step

The second step is to seek emergency foreign assistance from friendly countries. The Government has taken steps in this direction already. The Foreign Minister has approached the UAE and Iran for oil on credit. The Government has also requested another currency swap arrangement of US$ 500 million from India. There may be similar overtures to other countries. What success these have met with is still unknown. Their success is of immediate importance.

The third step

The third move is to ask for emergency balance of payments support from the International Monetary Fund (IMF). This is the best option, but one that requires a reversal of the Government's obstinate and impractical position that it will not go to the IMF.As discussed last Sunday, this is the best and least costly and most beneficial policy option both for the resolution of the immediate and long-term problem.

Concluding reflections

The severity of the crisis is not only what it is today, but what it will be tomorrow. Soon there would be severe shortages and restrictions in the availability of petrol, gas, basic foods, and medicines as foreign exchange dips to lower levels.

The severity of the foreign currency crisis demands wiser counsel than prevails. There are signs that such pragmatism prevails in a pivotal position and that the government is moving in such a direction. It is a Hobson's choice.

Courtesy: the SUNDAYTIMES, 2021 oct. 03

---

## Piano lessons




My name is Mildred Honor. I am a former elementary school Music Teacher from Des Moines, Iowa. I have always supplemented my income by Teaching Piano Lessons... for

over 30 years. During those years, I have taught some very talented students. I have never had the prodigy.

However,I have also had my share of what I call 'Musically Challenged Pupils.


Robby was 11 years old when his Mother (a Single Mom) dropped him off for his first Piano Lesson. I prefer that Students (especiallyBoys) begin at an earlier age, which I explained to Robby. But Robby said that it had always been his Mother's Dream to hear him play the piano, so I took him as a Student.At the end of each weekly lesson, he would always say 'My Mom's going to hear me Play someday.' But to me, it seemed hopeless, hejust did not have any Inborn Ability. I only knew his mother from a distance as she dropped Robby off or waited in her aged car to pickhim up. She al-ways waved and smiled, but never dropped in.

Then one day Robby stopped coming for his Lessons. I thought about calling him but assumed that because of his lack of ability hehad decided to pursue something else. I was also glad that he had stopped coming. Several weeks later I mailed a flyer recital to theStudents' homes. To my surprise, Robby (who had received a flyer) asked if he could be in the Recital. I told him that the recital wasfor current pupils and that be-cause he had dropped out, he really did Qualify.

He told me that his Mother had been Sick and Unable to take him to his piano les-sons, but that he had been practising. 'Please Miss Honor, I've just got to Play,' he insisted. I don't know what led me to allow him to play in the Recital - perhaps it was his insistence or maybe something inside of me saying that it would be all right. The night of the Recital came and I put Robby last in the Program, justbefore I was to come up and thank all the Students and Play a finishing piece. I thought that any damage he might do would come at theend of the Program and I could always salvage

his poor performance through my 'Curtain Closer'.

Well, the recital went off without a Hitch, the Students had been Practicing and it Showed. Then Robby came upon the stage. HisClothes were Wrinkled 'Why didn't his mother at least make him Comb his Hair for this Special Night?' Robby pulled out the



Pianobench, and I was surprised when he announced that he had chosen to play Mozart's Concerto No.21 in C Major. I was not prepared forwhat I heard next. His fingers were light on the keys, they even danced nimbly on the Ivories. He went from Pianissimo to Fortissimo,from Allegro to Virtuoso; his Suspended Chords that Mozart demands were magnificent! Never had I heard Mozart played so well by anyone his age. After six and a half minutes, he ended in a Grand Crescendo, and everyone was on their feet in Wild Applause!!! Overcome and inTears, I ran up on stage and put my arms around Robby in Joy. I have never heard you play like that Robby, how did you do it?' Throughthe Microphone, Robby explained:

“Well, Miss Honor, Remember I told you that my Mom was sick? Well, she actually had Cancer andPassed Away this Morning. And well... she was Born Deaf, so tonight was the first time she had ever heard me play, and I wanted to make it Special.”

I thought to myself then how much Richer my Life had been for taking Robby as my Pupil. No, I have never had a Prodigy, but thatnight I became a Prodigy... of Robby. He was the Teacher and I was the Pupil, for he had taught me the meaning of Perseverance and Loveand Believing in Yourself, and maybe even taking a chance on someone and you didn't know why. Robby was killed years later in theSenseless Bombing of the Alfred P. Murray Federal Building in Oklahoma City in April 1995.

Courtesy: VeluppillaiThangavel

## ThaaiNilam: Land Grabbing -

The Real Pandemic for the Tamils in Sri Lanka.

---- Justice C.V.Wigneswaran thanks participants ----

The Real Pandemic for the Tamils in Sri Lanka - Documentary Film Premiere and Panel Discussion were held on September 25, 2021. Justice C.V.Wigneswaran thanks participants:

“I am very pleased to invite all of you to the virtual screening of the documentary ThaaiNilam: Land Grabbing - The Real Pandemic for the Tamils in Sri Lanka. ThaaiNilam contains new information, never-before-seen footage, and interviews; all recorded directly from Sri Lanka’s occupation of the Tamil homeland.”

The screening will be followed by an online panel discussion entitled “Sri Lanka’s Ethnocratic Land Grabs: Methods, Consequences, and Tamil Land Defence.” The premiere of this important film was held via Zoom and Youtube, on September 25, 2021, at 5:30 PM IST (Jaffna and Trincomalee) / 1:00 PM GMT (London) / 8:00 AM EST (Toronto and New Jersey), and lasted for four hours. Details are as follow: The vicious and racist land dispossession activities carried out by the Sri Lankan government for the last 70 years–with the aim of dividing our homeland in the North and East of the island, depriving us of our livelihood, existence and identity–have now intensified.

The situation of the Tamil people in Sri Lanka has become very dangerous and developed into a difficult situation in which we are unable to protect and reclaim our lands. Along with our land, we are rapidly losing our lives and our identity of over 3,000

years. Thus, we are standing at a critical juncture where we have to fight against this land grab by combining all the opportunities, resources and strength we have. Activists all over the world fighting against oppression, injustice and human rights violations must speak out against this colossal repression against us and express their opposition to the activities of the Sri Lankan government and ask that it stops its land occupation and return the lands that they have stolen from our People. Against this backdrop, I have organised a screening of the documentary on land grabbing and a panel discussion with renowned international academics and human rights defenders—to create awareness among the Tamil people around the world and the international community about this heinous violation of our land rights by the Sri Lankan government against us. This event forms the launch of the Our Nilam campaign to preserve the Tamil homeland from Sri Lanka's land grabs.

The documentary speaks through various sources about the land grabbing that the Sri Lankan government has been carrying out for the past 70 years in the North-East, the native homeland of the Tamil-speaking people of Sri Lanka, and its methods, trends and consequences. I am pleased to announce that veteran politician Hon. R. Sampanthan, former Opposition Leader, Parliamentarian and Leader of the Tamil National Alliance (TNA), who is worthy of my respect and honour, will join me in launching this event. The list of event participants includes the following. • Keynote address: Prof. Oren Yiftachel, Lynn and Lloyd Hurst Family Chair of Urban Studies, Geography Dept. Ben-

Gurion University of the Negev, Be'er Sheva, Israel • Panelist: Dr MedhaPatkar, Indian social activist and founder of Narmada BachaoAndolan and the National Alliance of People’s Movements. • Panelist: MsAnuradhaMittal, Executive Director, The Oakland Institute, California, USA • Panelist: Professor RamuManivannan, Department of Politics & Public Administration School of Politics & International Studies, University of Madras, Chennai, India • The panel discussion will be followed by a musical performance by Canadian Tamil artist, Shan Vincent de Paul. This event is organised as a continuation of the international conference held on March 20, 2021, entitled "Loss of the Tamil Homeland: Identifying Issues and Creating Strategies to Preserve Tamil Land”, attended by academics, human rights defenders, and parliamentarians including Dr Navanetham Pillay, former judge of the International Criminal Court and former UN High Commissioner on Human Rights; David Matas CM, prominent international human rights lawyer and Nobel Peace Prize Nominee; Dr Ibrahim Seaga Shaw, Chairman and Information Commissioner of the Right to Access Information, Sierra Leone, Anuradha Mittal, Executive Director of the Oakland Institute, California, Wiley Nickel, former Obama White House Staffer and Democratic Senator for North Carolina and Rajavarothiam Sampanthan, Parliamentarian and former Leader of Opposition, Sri Lanka. I thank you for your participation in this important film premiere and campaign launch. Justice C.V.Wigneswaran Member of Parliament, Jaffna District, Sri Lanka

# THE BUDDHA

---- Dr. B.R. Ambedkar ----




Christ claimed to be the Prophet of Christianity. He further claimed that he was the Son of God. Christ also laid down the condition that there wasno salvation for a person unless he accepted that Christ was the Son of God. Thus Christ secured a place for Himself by making the salvation ofthe Christian depend upon his acceptance of Christ as the Prophet and Son of God.

Mohammad, the Prophet of Islam, claimed that he was a Prophet sent by God. He further claimed that no one could get salvation unless he accepted two other conditions. A seeker of salvation in Islam must acceptthat Mohammad is the Prophet of God. A

seeker after salvation in Islam must further accept that he is the last prophet. Salvation in Islam is thus ensured only to those who accept these two conditions.Mohammad thus secured a place for Himself by making the salvation of the Muslim depend upon his acknowledgement of Mohammed as the Prophet of God.

No such condition was ever made by the Buddha. He claimed that he was no more than the natural son of Suddhodana and Mahamaya. He carved for him[1]self no place in his religion bylaying down any such conditions regarding himself for salvation as Jesus and Mahommed did. That is the reason why we are left to know so little about himself even though abundant material was available.

As is known, the first Buddhist congregation was held soon after the death of the Buddha at Rajagraha. Kassyappa presided over the congregation. Anand, Upali and many others who belonged toKapilavatsu were present. But what did Kassyappa the President do? He asked Anand to repeat the Dhamma and put the question to the congregation, "Is this right?" They answered in the affirmative. And Kassyappa then closed the question. If Kassyappa had collected the record of the Buddha's life we would have had today a full-fledged biography of the Buddha.The Buddha did not promise to give Salvation. He said He was Marga Data (Way Finder) and not Moksha Data (Giver of Salvation).

Most religions are described as revelations. But the Buddha's religion is not a revelation. Revealed religion is so-calledbecause it is a message of God to His creatures to worship their maker (i.e., God) and to save their souls. Often the message is sent-

through a chosen individual who is called a prophet, to whom the message is revealed and who reveals it to the people. It is then called Religion. The obligation of the prophet is to ensure salvation to the faithful. The salvation of the faithful means the saving of their souls from being sent to hell, provided they obey God's commands and recognise the prophet as his messenger.

The Buddha never claimed that he was a prophet or a messenger of God. His religion is a discovery in the sense that it is the result ofinquiry and investigation into the conditions of human life on earth; and understanding of the working of human instincts with which man is born;the moulding of his instincts and dispositions which man has formed as a result of his[1]tory and tradition, and which are working to his detriment.

The Buddha did not Claim any Divinity for himself or for his Dhamma. It was discovered by man for man. It was not a Revelation. Every founder of a religion haseither claimed divinity for himself or for his teachings. Moses did claim divine origin for his teachings. because they were the teachings of Jehovah the God. Jesusclaimed divinity for himself. He claimed that he was the Son of God. Naturally, His teachings acquired a divine origin. Krishna said that he was God himself, and the Gita was his own word. The Buddha made no such claim, The only claim he made was that his message was the only true way to salvation as he understood it. It was based on the universalhuman experience of life in the world. He said that it was open to anyone to question it, test it, and find what truth it contained. No founder has so fully thrown openhis religion to such a challenge.

https://tamilwin.com/article/thai-land-documentary-release-1632519817

# ஐநா வசமுள்ள சான்றுகள்

**சிறிலங்காவில் பாதிப்புற்ற தமிழர்களுக்கு விரைவாக நீதி கிடைக்க ஐநா மனிதவுரிமை உயராணையர் வழிகாட்டத் தவறியதால் ஏமாற்றம்**



"பாதிக்கப்புற்ற குடும்பத்தினர் ஐநா வசமுள்ள தகவலை வேண்டிப்பெறுவதற்கு ஐநா மனிதவுரிமை உயராணையர் ஒரு பொறிமுறையைத் தோற்றுவிக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது."

2021 செப்டம்பர் 13ஆம் நாள் ஐநா மனிதவுரிமை உயராணையர் மனிதவுரிமைப்

உரிமைத்தமிழ்த்தேசம் படிக்க கீழே சொடுக்கவும்

https://drive.google.com/file/d/1ml5RiF9CcBNLl-NSJINbSHUZ9A7mM8LQ/view?usp=sharing

பேரவையின் 48ஆம் அமர்வில் புதிய அறிக்கை அளித்தார். பேரவைக்கு அளித்த அறிக்கையில் மேதகு மிசேல் பசலே அவர்கள் பற்பல துறைகளில் கவலை தெரிவித்தார். அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்:

1. "இராணுவ மயமாக்கமும் பொறுப்புக்கூறலின்மையும் அடிப்படை உரிமைகள் மீது தாக்கங்கொண்டு அவற்றை அரித்துத் தின்னும் நிலை…"
2. சிறிலங்காவில் ஆகஸ்டு 30ஆம் நாள் பிரகடனம் செய்யப்பட்ட புதிய நெருக்கடிநிலையும் அதனால் அன்றாட வாழ்வின் மீது இராணுவக் கட்டுப்பாடு விரிவடைந்திருப்பதும்;
3. "மனிதவுரிமைக் காவலர்கள், செய்தியாளர்கள், காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் ஆகியோர் மீதான வேவு பார்த்தலையும் அச்சுறுத்தலையும் நீதித்துறை வழித் தொல்லைப்படுத்தலையும்" விரிவாக்கி, மாணவர்களையும், கல்வித் துறையினரையும், மருத்துவப் பணியாளர்களையும், சமயத் தலைவர்களையும் கூட இவற்றுக்கு இலக்காக்குதல்;

4. 2008, 2009 ஆண்டுகளில் 11 பேரைக் காணாமலாக்கிய செயல்களுக்காக வசந்த கரண்ணகொடாவுக்கு எதிரான குற்றசாட்டுகளைத் தொடர்வதில்லை என்று அரசுத் தல்கமைச் சட்டத்தரணி எடுத்த முடிவு;

5. அரசாங்கம் தன் "தீவிரங்களைதல்" திட்டத்தின் ஊடாகத் தற்போக்கான நிர்வாக முடிவுசார்ந்த சிறைவைப்புகளில் இறங்கும் முயற்சிகளும் , 300க்கு மேற்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் குழுக்களையும் தனியாட்களையும் பயங்கரவாதிகள் என்று பட்டியலிட்டிருப்பதும்:

46/1 தீர்மானத்தில் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களுக்கான

பொறுப்புக்கூறல் தொடர்பான பகுதிகளைச் செயலாக்குவதில் தமது பணி தொடங்கி விட்டதாகவும், தமிழ்ச் சமூக உறுப்பினர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட பன்னாட்டுக் குற்றங்களுக்கான பொறுப்பை நிறுவத் தேவையான “கிட்டத்தட்ட 1,20.000 தனி உருப்படிகள்” ஐநாவிடம் இருப்பதைத் தமது அலுவலகம் இனங்கண்டிருப்பதாகவும் உயராணையர் அறியத் தந்தார்.

போர்க் காலத்தில் தமிழ்க்குடிமக்கள் காணாமலாக்கப்பட்டது தொடர்பாகவும், அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பன்னாட்டுக் குற்றங்கள் தொடர்பாகவும் இப்படிப் பெருந்தொகையான சான்றுகள் ஐநா வசம் இருந்த போதிலும் பொறுப்புக்கூறலுக்கு நம்பகமான பன்னாட்டுப் பொறிமுறை ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை என்பது குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆழ்ந்த கவலை தெரிவித்துக் கொள்கிறது.

தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நேரிட்டது என்பது தொடர்பாக அறிந்து கொள்ளும் உரிமையும் உண்மையறியும் உரிமையும் காணாமற்போனோரின் குடும்பத்தினருக்கு உண்டு. காணாமற்போன அவர்தம் குடும்ப உறவுகள் தொடர்பாகத் தன் வசமுள்ள ஆதாரப் பொருட்பாடுகளை இந்தக் குடும்பங்களுக்கு எட்டச் செய்ய ஐநாவுக்கு சுயேச்சையான கடப்பாடு உள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 'பாதிக்கப்பட்டோர் முனைப்பிலான பன்னாட்டு நீதி' என்ற ஒரு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான தகவல் கிடைக்கப் பெற அனுமதிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

ஐநாவின் கைவசமுள்ள தகவலை இந்தக் குடும்பங்கள் வேண்டிப் பெறும் படியான ஒரு பொறிமுறையைத் தோற்றுவிக்குமாறு உயராணையரை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அழுத்தந்திருத்தமாகக் கேட்டுக் கொள்கிறது. கையில் வைத்துள்ள பொருத்தப்பாடுள்ள தகவலை வெளியிட மறுப்பது சிறிலங்க அரசாங்கம் ஆனாலும்

சரி, ஐநா ஆனாலும் சரி, இந்தக் குடும்பங்களின் துன்பம் தொடர்கிறது. பன்னாட்டுச் சட்டப்படி உண்மையறியும் உரிமை என்பது காணாமற்போன குடும்பத்தினர் தொடர்பாக ஐநா வசமுள்ள தகவலை அணுகிக் கொள்ளும் உரிமையை இந்தக் குடும்பங்களுக்கு வழங்குகிறது. இந்த உரிமையைச் செலுத்தத் துணைசெய்யுங்கள் என உயரானையரைக் கோருகின்றோம்.

உயராணையர் தொடர்ந்து விழிப்புடன் செயல்படுவதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பாராட்டுகிறது. 46/1 தீர்மானத்தின் காரணத்தாலும் அத்தீர்மானத்தைத் தொடர்ந்தும் இந்த 46/1 தீர்மானம் 2022 செப்டம்பரில் காலாவதியாகும் போது பேரவை பொறுப்புக்கூறல் தொடர்பான புதிய செயல்வழி மேற்கொள்ள முடியும் என்ற உண்மையை நாகதஅ கருத்திற்கொண்டுள்ளது.

அதாவது, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பார்வையில் 46/1 தீர்மானம் நீதியைத் தாமதப்படுத்தியுள்ளது.

இது காரணமாகத்தான், 46/1 தீர்மானம் சிறிலங்காவுக்குத் தோல்வி என்றாலும் தமிழர்களுக்கு நீதியன்று என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அப்போது நிலையெடுத்தது. உயராணையர் உறுப்பரசுகளை மட்டுமல்லாமல், மற்ற அரசுகளையும் கூட இச்செய்தியை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்வதற்கும், இனவழிப்பு உடன்படிக்கையின் கீழ் மியான்மருக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்தவை போன்ற இடைக்கால வழிமுறைகளை நாடுவதற்கும் 46/1 தீர்மானம் தடை போடவில்லை என்பதே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பார்வை.

உயராணையரின் புதிய அறிக்கை உள்நாட்டுச் சட்டகத்திற்குள் மட்டுமே முழுக் கவனத்தையும் குவிக்கின்ற நிலையில், "அரசாங்கம் பன்னாட்டுக் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல் நோக்கிப் பொருள்பொதிந்த வழியிற்செல்ல தன் இயலாமையையும் விருப்பமின்மையையும் காட்டியுள்ளது என்பதும், உறுப்பரசுகள் " அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பக் கருதுவதன் வாயிலாகக் குற்றப் பொறுப்பை முன்னெடுக்கவும், அனைத்துலக மேலுரிமையின் கீழ் புலனாய்வும் வழக்குத் தொடுத்தலும் நிறுவிடவும் வேண்டும்" (A/HRC/46/20, 9 பிப்ரவரி 2021) என்பதுமான தமது முந்தைய நிலைப்பாட்டிலிருந்து உயராணையர் பின்னடித்து விடுவாரோ என்று கவலை கொள்கிறோம்.

முடிவாகச் சொன்னால், சிறிலங்காவில் பொறுப்புக் கூறல் இல்லாத நிலையின் மீது உயராணையர் தொடர்ந்து கவனம் குவித்திருப்பதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பாராட்டுகிறது என்னும் போதே, பாதிப்புற்ற பத்தாயிரக்கணக்கான தமிழர்களுக்கு உள்ளபடியே பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறையேதும் இந்தக் கவனக்குவிப்பின் விளைவாகக் கிடைத்து விடவில்லை என்ற ஏமாற்றம் தொடர்வதை நாகதஅ சொல்லத்தான் வேண்டும். பன்னாட்டுக் கடுங்குற்றங்களால் பாதிப்புற்று, தங்கள் அன்புக்குரியவர்கள் என்னவானார்கள் என்பதையறிய இவ்வளவு நீண்ட காலம் காத்திருந்த பிறகும் இந்த ஏமாற்றம் தொடர்கிறது..

# -கருத்தியல் இதயத்தில் ஒரு ஈட்டி

--- திசாராணி குணசேகரா ---

(முழுச் சிங்கள சமூகமும் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள அறிவுப்பிழைப்பார்கள் மத்தியில் நியாயத்தை, நீதியை கடைப் பிடிப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் இக்கட்டுரையாளர். Colombotelegraph இணைய தளத்தில் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையை https://www.colombotelegraph.com/index.php/a-stake-through-the-ideological-heart/comment-page-1/?unapproved=2408930&moderation-hash=19e840286504054d4ee667c05aa61834#comment-2408930p;pmnp என்ற முகவரியில் படிக்கலாம். தமிழாக்கம் நக்கீரன்)

"போதுமான இறப்பு ஏற்பட்டுள்ளது." ~ Colm Tóbín (House of Names)

சனாதிபதி பதவியை இழந்த சில மணிநேரங்களுக்குப் பிறகு, மகிந்த இராசபக்ச தனது மூதாதையர் வீட்டில் ஒரு சன்னல் மீது ஏறி, துக்கத்தில் இருந்த தனது ஆதரவாளர்களுக்கு "அவர்கள் ஈழத்தில் இருந்து பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்" எனக் கூறினார்.

மெதமுலான பிரகடனம் மைத்திரிபால சிறிசேனவினால் மகிந்த இராசபக்ச தோற்கடிக்கப்பட்டதை சிங்கள - பவுத்த இலங்கையை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் தோற்கடித்தாக மகிந்த இராசபக்சா சித்திரித்தார். இந்த மறுவாசிப்பில், சிறுபான்மையினர் வாக்காளர்கள், குடிமக்கள் ஆனால் அந்நியர். சிங்கள- பவுத்த பிறப்புரிமையின் ஒரு வெளிப்பாடாக, அவர்கள் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் எந்தவொரு தேர்தல் முடிவும் வரையறையின் மூலம் சட்டவிரோதமானது. இந்தப் பொய்யான கதைக்கு ஒற்றைக் குறிக்கோள் இருந்தது - இராசபக்சாக்கள் சிங்கள - பவுத்த வாக்குகளால் மட்டுமே அதிகாரத்தை மீண்டும் பெற முடியும். ஆனால் இது சனாதிபதி முறையின் கீழ் சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது.

பெரும்பான்மை மக்களது மனக்குறை அரசியல் மட்டுமே என்பது இராசபக்சாவின் உத்தியாக மாறியது. மகிந்தா சுலங்காவில் தொடங்கி, இராசபக்ச தலைமையிலான எதிர்க்கட்சிகள் சிங்கள பவுத்த சுனாமியால் இலங்கை சனநாயகத்தை மூழ்கடிக்கத் திட்டமிட்ட பரப்புரை மேற்கொண்டன. இந்தச் செயற்பாட்டில், இராசபக்சவுக்கும் பெரும்பான்மை சமூகத்துக்கும் இடையே ஒரு மத - இன உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. அதுவே இராசபக்ச அதிகாரத்திற்கு ஈடாக சிங்கள - பவுத்த மேலாதிக்கம். சிறுபான்மையினருக்கு இனிச் சலுகைகள் அல்லது சகாயங்கள் இல்லை; இந்தியா அல்லது மேற்கு நாடுகளை இனித்திருப்திப்படுத்த முடியாது. அரசியல் பிக்குகளின் இராணுவம் இந்தப் பேரத்தின் உத்தரவாத தாரர்களாகவும் - விற்பனையாளர்களாகவும் செயல்பட்டது.

இந்தச் சூதாட்டம் வேலை செய்தது. 2019 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் தீவிரவாதிகள் சுமார் 270 அப்பாவி மக்களைத் தற்கொலைத் தாக்குதல் மூலம் கொன்றார்கள். இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு முஸ்லீம் மத வெறியர்களின் குழுவின் சிறிய உதவி இருந்தது. மெதமுலானாவில் தொடங்கிய பிளவுபட்ட பயணம் மகத்தான வெற்றி பெற்றது. கோட்டாபய இராசபக்ச அவர்களை சிங்கள - பவுத்த வாக்காளர்கள் அதிபர் பதவியில் அமர்த்தினார்கள்.

இராசபக்சாக்கள் கருத்தியல் சார்ந்தவர்கள் அல்ல. அவர்கள் ஒரு சித்தாந்தத்தின் முழுமையான பயனர்கள். சிங்கள - பவுத்த மேலாதிக்கவாதம் அவர்களின் வாள் மற்றும் கேடயம் ஆகும். அவர்களின் அதிகாரத்திற்கான பாதை மற்றும் எதிர்ப்பிற்கு எதிரான அவர்களின் பாதுகாப்பு ஆகும். மற்ற அனைத்தும் தோல்வியடையும் போது சிங்கள - பவுத்த மேலாதிக்கவாதம் தலைதூக்கும்.

சிங்கள - பவுத்தத்தின் மீதான இராசபக்ச விசுவாசம் ஷி ஜின்பிங்கின் சோசலிசத்தின் மீதுள்ள விசுவாசத்திலிருந்து வேறுபட்டதல்ல. ஆனால் பக்தியின் காட்சிகள் மற்றும் அறநெறி பற்றிய அறிவிப்புகள் மூலம் இடைவெளிகளை மறைக்க எண்ணலாம். இலங்கை ஒரு தூய சிங்கள-பவுத்த இராச்சியம் ஆகும். இது சிறுபான்மையினரைப் பற்றிக் கவலைப்படாத மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு பயப்படாத ஒரு தடித்த

குடும்பத்தினால் வழிநடத்தப்படுகிறது. அந்தக் கற்பனாவாதத்தில், ஏழ்மையான சிங்கள - பவுத்தர்கள் கூட பணக்காரத் தமிழ், முஸ்லீம் அல்லது கிறிஸ்தவர்களை விட அதிக அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் என்பதை அறிந்து திருப்தி அடைகிறார்கள். சில பொருளாதார அப்பத்துண்டுகளை வீசினால் இராசபக்ச ஆட்சி சிங்கள - பவுத்த கைகளில் இளம் நாமல் வரை, ஒருவேளை அதற்கு அப்பாலும் பாதுகாப்பாக இருக்கும்.

இப்போது அந்த கற்பனாவாதம் சிதறுண்டு கிடக்கிறது. ஒரு குழந்தையின் பால் பவுடருக்காக வரிசையில் மணிக்கணக்கில் செலவிட வேண்டியிருக்கும் போது, யாரையும் விட தாங்கள் உயர்ந்தவர்கள் என உணர்வது கடினம். அல்லது வெற்று எரிவாயு சிலிண்டருடன் ஒரு கடையிலிருந்து இன்னொரு கடைக்கு விரைந்து செல்லவேண்டும். இராசபக்ச உருவாக்கிய, தொற்றுநோய் - மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு இணையாக விரக்தி புதிய உச்சத்தை எட்டும்போது, ஆட்சிக்கு இருக்கும் ஒரே வழி சிங்கள- பவுத்த கோபத்தை பொருத்தமான எதிரியை நோக்கி மடமாற்றுவதாகும்.

“இஸ்லாம் பாகிஸ்தானிலும் மற்றும் பிற முஸ்லீம் நாடுகளிலும் பலவீனமான மற்றும் கேவலமான ஆட்சிகள் மற்றும் நவீன காலங்களில் தலைவர்களுக்கான புகலிடமாக உள்ளது” என்று இக்பால் அகமது (Eqbal Ahmed) எச்சரித்துள்ளார். “அவர்கள் தாங்கள் அச்சுறுத்தப் படுவதாகவும் தனிமைப்படுத்தப் பட்டதாகவும் உணரும்போது - மற்றும் அவர்களின் பிடியை இழந்து, புகழ் இழந்து, மக்களின் ஒருமித்த உணர்வை இழந்து - அவர்கள் இஸ்லாமை மறைவிலிருந்து வெளியே கொண்டு வந்து அதை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்” (பேரரசை எதிர்கொள்வது). இந்த வாசிப்பு இன்றைய இலங்கைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. ஏனெனில் இராசபக்சாக்கள் தேய்ந்து வரும் தங்கள் புகழில் ஒட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

சிங்கள-பவுத்தர்களின் இருப்புக்கான புதிய மற்றும் பயங்கரமான அச்சுறுத்தல்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படும். இன்னும் பயங்கரமான போர்வையில் பழக்கமான

எதிரிகள் நிலப்பரப்பில் பரவி இருப்பார்கள். அச்சத்துடனும் பீதியுடனும் சிங்கள - பவுத்த வாக்காளர்கள் அப்பாச்சி மகிந்த, கோட்டாபய, பசில் மற்றும் நாமல் ஆகியோரை வெற்றுப் பைகளில் மற்றும் வெற்று வயிற்றில் கூட ஒட்டிக்கொள்வார்கள்.

பவுத்த பிக்கு கலகொட - அத்தே ஞானசாரரை திடீரென வெளியில் கட்டவிழ்த்துவிடப்பட்டது, அவர் முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கர்களுக்கு எதிராகப் புண்படுத்தும் வார்த்தைகளை வீசுவது, அந்த எதிர்காலத்தை முன்னறிவிக்கிறது.

தீவிரவாத நரகங்களிலிருந்து வௌவால்கள்

கடந்த பத்தாண்டுகளில் இரண்டு முஸ்லீம் எதிர்ப்புக் கலவரங்களை இலங்கை சந்தித்தது. இரண்டிற்கும் முன்னால் முஸ்லீம் விரோத வெறி, அலுத்கமவில் இடம்பெற்ற ஹலால் பற்றிய பயம் மற்றும் திகனாவுக்கு முன்னால் வாந்தி பேதி பற்றிய பைத்தியம் இடம்பெற்றது. அவை காரணமாக எழுந்த பயம் மற்றும் வெறுப்புச் சூழ்நிலை போன்ற தற்செயலான சம்பவங்கள் எதிர்காலத்தில் வன்முறையை கட்டவுழ்க்கப் பயன்படுத்தப்படலாம்.

2014 இல் அளுத்கமவில், அது ஒரு பவுத்த பிக்கு மற்றும் மூன்று முஸ்லீம் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட ஒரு தகராறு இடம்பெற்றது. பவுத்த பிக்கு கலகொட - அத்தே ஞானசார தலைமையிலான பொதுபலசேனா அந்த நகரத்தில் இறங்காமல் இருந்திருந்தால் அது நடந்திருக்காது. “இந்த நாட்டில் இன்னும் சிங்களக் காவல்துறை, சிங்கள இராணுவம் உள்ளன. இன்றைக்குப் பிறகு ஒரு ஒற்றை முஸ்லீம் அல்லது வேறு சில வேற்றுகிரகவாசிகள் ஒற்றைச் சிங்களவர் மீது கை வைத்தால், அல்லது பவுத்த தேரர் மீது கை வைத்திருந்தால் இந்த அனைத்து உயிரினங்களின் முடிவாக இருக்கும்” என அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் ஞானசார பிக்கு இடிபோல் முழங்கினார். இதனால் வன்முறை வெடித்தது, கலவரக்காரர்கள், பெரும்பாலும் வெள்ளை உடை அணிந்த முஸ்லீம் மக்களது சொத்துக்களை தண்டனை கிடைக்காது என்ற துணிவில் தாக்கினர்.

திகனாவும் இது போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தது. பெப்ரவரி 20, 2018 அன்று, ஒரு சிறிய சாலை விபத்தைத் தொடர்ந்து, நான்கு முச்சக்கரவண்டிப் பயணிகள் பாரவண்டி ஓட்டுநரை கடுமையாகத் தாக்கினர். தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லீம்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர். தாக்குதல் நடத்திய முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மார்ச் 3 ஆம் நாள் இறந்தார். அநியாயமாக நடந்த உயிர்ச்சேதம் பற்றி வருத்தம் இருந்தது, ஆனால் மார்ச் 4 அன்று மாலை பிக்கு கலகொட - அத்தே ஞானசாரார் இறுதிச் சடங்குக்குச் செல்லும்வரை கோபமோ அல்லது முஸ்லிம்களைக் குறிவைத்த எந்தக் கோபமும் இருக்கவில்லை. ஆனால் ஞானசேரர் சென்றவுடன் கலவரம் தொடங்கியது.

பகுத்தறிவுயின்மை என்பது மத வெறியரின் பகுத்தறிவு ஆகும். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை படுகொலை அளுத்கம மற்றும் திகானா இல்லாவிட்டாலும் கூட நடந்திருக்கலாம், ஏனென்றால் தற்கொலைக் குண்டுவெடிப்பாளர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிஜ உலகில் இல்லாத ஒரு மன வெளியில் வாழ்ந்தனர். ஆனால் அலுத்கம மற்றும் திகானா சஹ்ரான் ஹாஷிமின் கொடிய தற்கொலைத் தாக்குதலை எளிதாக்கியிருக்கும். ஆட்சேர்ப்புக்கு அவர் சொல்ல வேண்டியதெல்லாம், அலுத்கம மற்றும் திகானா இரண்டையும் பாருங்கள் என்பதாக இருக்கும்.

இப்போது பிக்கு ஞானசாரர் தனது வழக்கமான - கீழ்த்தரமான விளையாட்டில் மும்மரமாக ஈடுபட்டுள்ளார். இந்த முறை, அவருக்கு அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி மூலம் ஒரு மேடை கொடுக்கப் பட்டுள்ளது. மகிந்த இராசபக்ச பொலக்னா (Bologna) இல் மத நல்லிணக்கத்தைப் பேசிக்கொண்டிருந்தபோது, கோட்டாபய இராசபக்ச நியூயோர்க்கில் நல்லிணக்கத்தைப் போதித்துக்கொண்டிருந்தபோது, கொழும்பில், பிக்கு ஞானசாரர் அரச தொலைக்காட்சியில் மற்றொரு மத வன்முறைக்கான அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருந்தார்.

இந்தக் கிழமை இலங்கை, இந்தியாவிடம் எரிபொருளை வாங்குவதற்கு 500 மில்லியன் டொலர் கடன் கேட்டது நமது பொருளாதாரத்தின் நிலையற்ற நிலைமையின் மற்றொரு அறிகுறியாகும். கலகலப்பைத் தூண்டும் இராசபக்சவின் பினாமிகள், சிறுபான்மையினருக்கு எதிராக மற்றொரு வன்முறையை கட்டவுழ்த்து விட்டால், அது ஏற்கனவே நோய்வாய்ப்பட்ட பொருளாதாரத்திற்குக் கொலைகார அடியாக இருக்கும். பேரம் பேசும் அடித்தள விலைகளிலும் முதலீட்டாளர்கள், பிரதான சொத்துக்காக வாங்குபவர்கள் இருக்க மாட்டார்கள், மிகக் குறைவான சுற்றுலாப் பயணிகளே இருப்பார்கள். பொருளாதாரம் நொறுங்கும், ரூபாய் வீழ்ச்சியடையும், பசியும் தேவையும் நாட்டைப் பீடிக்கும். இதில் பாதிக்கப்பட்டவர்களின் இனம் அல்லது மதம் பற்றிய கவலை இருக்காது.

இராசபக்சாக்கள் தங்கள் சிங்கள - பவுத்த அடித்தளத்தின் குருதிக் கசிவை நிறுத்துவதற்காக அரசியல்-பொருளாதாரத்தின் மீது ஒரு தவறான இன/மத முரண்பாட்டை மிகைப்படுத்த முயற்சிக்கின்றனர். குடும்பத்தின் அரசியல் பிழைப்புக்கு சிறுபான்மை எதிர்ப்புவெறி மற்றொரு அலை அவசியம். ஆனால் அது முழு இலங்கைக்கும் மற்றும் அனைத்து இனத்தவருக்கும் மதத்திற்கும் ஆபத்தானது. இராசபக்சாக்கள் தங்கள் சொந்தப் பிழைப்புக்காக செய்ய வேண்டியவை இலங்கை ஒரு தேசிய அரசா நிலைத்து இருத்தலை கடுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

“அரசியல் என்பது ஒரு மனிதனின் வித்தியாசமான வழிபாட்டைப் பற்றியது அல்ல” என்று அமெரிக்க மேலவை உறுப்பினர் பென் சாஸ் ( Ben Sasse) ட்ரம்ப் தேர்தல் அவதூறுகளின் பின்னணியில் தனது சக குடியரசுக் கட்சியினருக்கு நினைவுபடுத்தினார் (CNN - 15.2.2021).

இராசபக்சவின் பிரபஞ்சத்தில், அரசியல் என்பது ஒரு குடும்பத்தின் வித்தியாசமான வழிபாடு தவிர வேறில்லை. உடுவே தர்மாலோக தேரர் (ஒரு முறை அவர் ஒரு காலை வேளையில் இரண்டு யானைக் குட்டிகளைத் தனது கோவில் வாசல்களுக்கு வெளியே வீசப்பபட்டதாகக் கூறினார்) அண்மையில் இரசபக்சாக்களை அழித்ததை இலங்கையை அழித்ததோடு ஒப்பிட்டார். உண்மையில் அதற்கு எதிர்மாறுதான்

உண்மை. இராசபக்சே சித்தாந்தத்தின் மையத்தில் பொய்யான கதைக்கூற்றின் மூலம் ஒரு ஈட்டியைச் சொருகினால் மட்டுமே இலங்கைக்கு எதிர்காலம் இருக்க முடியும். இராசபக்சவை தோற்கடிப்பது போதாது; அவர்களின் சூழ்ச்சி வெளிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். அல்லது அவர்கள் மற்றொரு சுற்று இரத்தக் கசிவுக்குத் திரும்புவார்கள்.

நன்றி: நக்கீரன் (இணையம்)

---

## உள்ளே கோத்தபயா! வெளியே உருத்ரகுமாரன்!!

## பரபரத்த புதுயார்க்!

### --- கொழும்பு ஊடகம் செய்தி ---

சிறிலங்கா அரசுத்தலைவர் கோத்தபாய இராஜபக்ச நியு யோர்க் ஐ.நா சபையின் உள்ளே, உள்ளகபொறிமுறை குறித்து பேசிக் கொண்டிருக்க, சிறிலங்காவை சர்தேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் ஐ.நாவின் வெளியே குரல் எழுப்பினார் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கோத்தாவே திரும்பிப் போ என்ற முழக்கத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்று புதன்கிழமை ஐ.நாவின் முன்னால் மேற்கொண்டிருந்தது..

ஒரு போர்க்குற்றவாளியை ஐ.நா தனது அரங்கில் உரையாற்ற அனுமதித்தனைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைகின்றோம். இனப்படுகொலையாளி ஒமர் அல்-பஷீர் இந்த அரங்கில் உரையாற்றினார் என்ற உண்மையை அறிவோம். உகாண்டா நாட்டு சர்வாதிகாரி இடி அமீன் ஒருமுறை இந்த அரங்கில் உரையாற்றினார் என்பதையும் அறிவோம். இந்நிலையில் இந்த அரங்கில் (.ஐ.நா) கோத்தா உரையாற்ற அனுமதிக்கப்பட்டதில் எங்களுக்கு ஆச்சரியமில்லை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் குரலெழுப்பினார். சர்வதேச நீதிப்பொறிமுறையினை நிராகரித்து உள்ளகப்பொறிமுறை குறித்து தனது

நிலைப்பாட்டை கோத்தா வெளிப்படுத்தியிருந்த நிலையில், அதற்கு எதிர்வினையாற்றிய பிரதமர் வி.உருத்திரகுமாரன், பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச நீதிப்பொறிமுறை என்பது தமிழர்களின் நிலைப்பாடு மட்டுமன்றி, அனைத்துலக சமூகத்தின் நிலைப்பாடு என்பதனை வலியுறுத்தினார். சிறிலங்கா அரசு, அதன் அரசாங்க கட்டமைப்பு யாவிலும் ஆழவேரூன்றியுள்ள இனநாயகம், இனவெறியின் உண்மையினை உலகம் அறியும் என்பதோடு, இதன் ஊடாகத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இடமில்லை என்பதனை, சிறிலங்காவின் வரலாறு பல தசாப்தங்களாக நன்கு நிரூபித்துள்ளது என பிரதமர் வி.உருத்திரகுமாரன் இடித்துரைத்தார்.

தமிழினத்தின் மீது நடந்தேறிய குற்றங்கள் என்பது ஒரு தனிநபராலோ அல்லது தனிப் பட்டாலியனாலோ அல்ல, மாறாக சிறிலங்கா அரசால் நிகழ்தப்பட்டது. குற்றம்புரிந்தவரே நீதிபதியாக இருக்க முடியாது என்பது பொது அறிவு மற்றும் அடிப்படை சட்டக் கொள்கையாகும் என்பதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் குறித்துரைத்தார்.

கோத்தபயாவுக்கு தார்மீக தைரியம் இருந்தால், சிறிலங்காவின் தலைவராக ரோம் சட்டத்தில் கைச்சாத்திட்டு, பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு சமர்ப்பிக்குமாறு நாங்கள் சவால் விடுகிறோம் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்ததோடு, அவர் அதை செய்ய மாட்டார் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் அவர் ஒரு கோழை என இடித்துரைத்தார்.

ஐ.நாவில் உரையாற்ற கோத்தபய ராஜபக்சேவுக்கு ஐ.நாவின் நெறிமுறைகள் அனுமதித்தாலும், 1987ஆம் ஆண்டு ஐநாவில் பொதுச்சபைக்கு வருவதற்கு அப்போதைய ஒஸ்திரிய அதிபர் கர்ட் வால்ட்ஹெய்முக்கு விசா வழங்க மறுத்ததைப் போலவே, கோத்தாவுக்கும் அமெரிக்கா அனுமதி மறுத்திருக்கலாம் என்பதையும் கூற வேண்டும். இரண்டாம் உலகப் போரில் அவர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்ற அடிப்படையில் அனுமதிமறுக்கப்பட்டதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் எடுத்துக்காட்டினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை, கோத்தாவை தனது கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்து,

# ஆபேல்

+14167669544

காணாமல் ஆக்கப்பட்டவர்

எங்கே எம் உறவுகள்

மாதமிரு முறை இருமொழியேடு வடிவமைப்பு: தோழர் சமந்தா

இதழ்; 19: 2021 செப்டம்பர் 30

abelfortnightly@gmail.com

ஆசிரியர்: ஆறுமுகம் கோபால் சிறப்பாசிரியர்: தோழர் தியாகு





எதிர்காலத்தில் அவர் நுழைவதை மறுக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம் எனக் கோரிய வி.உருத்திரகுமாரன், இன்று கோத்தாவுக்கு சத்தமாகவும் தெளிவாகவும் இங்கிருந்து ஒரு செய்தியை அனுப்ப விரும்புகிறோம். பஷீருக்கு என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அவருடைய அணியில் சேரும் நாள் வெகுதொலைவில் இல்லை என பிரதமர் வி.உருத்திரகுமாரன் உள்ளே உரையாற்றிக் கொண்டிருந்த சிறிலங்கா அதிபர் கோத்தபாயவை நோக்கி இடித்துரைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.